# கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களிடையே வழங்கிவரும் 'கவிகள்'

## நாட்டார் பண்பாட்டுக் கோட்பாட்டு நோக்கிலான ஆய்வு

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
25 JUL 2016
Vantharumoolai
Chenkalady

முகம்மது இஸ்மாயில் முகம்மது ஹனிபா
**EU/PGS/2009/AC/PhD/04**

PhD10
Thesis
Library - EUSL

கலாநிதிப் பட்ட ஆய்வு

மொழித்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2014

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| ஆய்வுச் சுருக்கம் | ii |
| குறுக்க விளக்கம் | iii |
| நன்றியுரை | iv |
| இயல் : ஒன்று | |
| ஆய்வு அறிமுகம் | 1 - 5 |
| 1.1 ஆய்வுத்தலைப்பு | 1 |
| 1.2 ஆய்வின் கருதுகோள் | 1 |
| 1.3 ஆய்வு நோக்கங்கள் | 1 |
| 1.4 ஆய்வுப் பிரதேசம் | 2 |
| 1.5 ஆய்வுமுறையியல் | 2 |
| 1.6 ஆய்வின் அமைப்பு | 2 - 3 |
| 1.7 ஆய்வு மூலங்கள் | 3 |
| 1.8 ஆய்வு தொடர்பான பிரச்சினைகள் | 4 - 5 |
| இயல் : இரண்டு | |
| இலக்கிய மீளாய்வு | 6 - 26 |
| 2.0 அறிமுகம் | 6 |
| 2.1 கிழக்கிலங்கைக் கவிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுப்பு நூல்கள் | 6 - 7 |
| 2.2 கிழக்கிலங்கைக் கவிகளை ஒரு பகுதியாகக் கொண்ட நாட்டார்பாடல் தொகுப்பு நூல்கள் | 7 - 9 |
| 2.3 கிழக்கிலங்கைக் கவிகளும் அவைபற்றிய விளக்கங்களையும் கொண்ட நூல்கள் | 9 - 14 |
| 2.4 கிழக்கிலங்கைக் கவிகளை உள்ளடக்கிய ஆய்வு நூல்கள் | 14 - 17 |
| 2.5 கிழக்கிலங்கைக் கவிகளை உள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகள் | 17 - 20 |
| 2.6 கவிகளோடு தொடர்புடைய வேறு பிரதேச நாட்டார்பாடல் தொகுப்புக்கள் | 20 - 26 |

LIBRARY
24 NOV 2017
EASTERN UNIVERSITY

இயல் : மூன்று


கிழக்கிலங்கை : ஒரு பொதுப்பார்வை 27 - 49

3.0 அறிமுகம் 27
3.1 கிழக்கிலங்கையின் புவியியல் கட்டமைப்பு 27 - 29
3.2 குடிப்பரம்பலும் சமூக அமைப்பும் 29 - 36
3.3 சமூக வாழ்வு 37 - 38
3.4 தொழில் முறை 38 - 43
3.5 கல்வி 44 - 45
3.6 சமயம் 46 - 47
3.7 மொழி 47 - 49



LIBRARY
24 NOV 2017


இயல் : நான்கு


கவிகள் : ஓர் அறிமுகம் 50 - 93

4.0 அறிமுகம் 50
4.1 கவிகளின் பாடுபொருள்
    4.1.1 சமூகம் 51
        4.1.1.1 தொழில் 51
        4.1.1.2 காதல் 52
        4.1.1.3 சமூகப் பிரச்சினைகள் 52 - 54
    4.1.2 உயிரினங்கள் 54 - 59
    4.1.3 வசை அல்லது நையாண்டி 60
    4.1.4 ஏனையவை 60 - 61
4.2 கவிகளின் பாடுபொருள் தொடர்பான பிரச்சினைகள் 61 - 71
4.3 கவிகளின் வடிவம் 71 - 77
4.4 கவிகளின் தோற்றம் தொடர்பான பிரச்சினைகள் 78 - 93


இயல் : ஐந்து


கவிகள் வெளிப்படுத்தும் பண்பாட்டம்சங்கள் 94 - 161

5.0 அறிமுகம் 94
5.1 பண்பாடு பற்றிய விளக்கம் 94
5.2 நம்பிக்கைசார் பண்பாடு 94 - 104
5.3 வழிபாடு, சடங்கு, சம்பிரதாயங்கள் தொடர்பான பண்பாடு 104 - 109

# ஆய்வுச் சுருக்கம்

தமிழியலாய்வின் அடிப்படை ஆதாரங்கள் என்றவகையில் செந்நெறி இலக்கியங்களுக்கு நிகராக நாட்டார் இலக்கியங்களும் முக்கியமானவை என்பது அண்மைக்காலமாக உணரப்பட்டு வருகின்றது. இவ்விதத்தில் ஈழத்தில் அவதானிக்கப்படுகின்ற நாட்டார் பாடல் வகைகளுள் ஒன்றாகிய ‘கவிகள்’ வெளிப்படுத்தும் கிழக்கிலங்கை மக்களின் பண்பாட்டு அம்சங்களை (நாட்டார் பண்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில்) அணுகுவதாக இவ்வாய்வு அமைகிறது.

‘கவி’ எனும் பாடல் வடிவம் பற்றிய அறிமுகத்தை வழங்குவதனூடாக ஈழத்தில் குறிப்பாக கிழக்கிலங்கையின் சிறப்பு நாட்டாரிலக்கிய வகையாக அமையும். கவிகளின் பெறுமானத்தை வெளிப்படுத்துவதும் கிழக்கிலங்கையில் பாரம்பரியமாக வாழும் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்துவதும் பண்பாட்டு மாற்றங்களைத் தெளிவுபடுத்துவதும் இவ்வாய்வின் பிரதான பயன்களாக உள்ளன. இப்பயன்களை அடையத்தக்க வகையில் இலக்கிய மீளாய்வு, கிழக்கிலங்கையின் புவியியல் கட்டமைவு, பாரம்பரியமான தொழில் முறைகள், சமூக, சமய, கல்விப் பின்னணி என்பன பற்றியும் கவிகள் தொடர்பாக தொகுப்பாளர்கள், ஆய்வாளர்களிடையே காணப்படும் பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழும் பிரதேசங்களுள் கிழக்கிலங்கையிலேயே அதிகளவான நாட்டார் கலை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இப்பிரதேச மக்களின் பாரம்பரியமான விவசாயத் தொழில் முறை இதற்குத் தளமாக அமைந்தது. இவ்வமைப்பில் விவசாயப் பின்னணியில் ‘கவி’ எனும் நாட்டார் பாடல்வகை கிழக்கிலங்கையில் தோன்றியுள்ளது.

தொழில், சமூகம், காதல் முதலான பலபொருள் சார்ந்தனவாகத் தோன்றியுள்ள கவிகள், கிழக்கிலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டம்சங்களது வெளிப்படுத்தல்களாக உள்ளன. அதேவேளை, இக்கவிகள் ஒரு கால சமூகத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சான்றுகளாகவுமுள்ளன.

விவசாயத்தொழில் முறையோடு சேர்ந்த பாரம்பரியங்கள் உழவு இயந்திரம், அறுவடை இயந்திரம் முதலானவற்றின் வருகையோடு மாற்றமடைந்து செல்வதாலும் விரைவாக வளர்ந்து வரும் நவீனத்துவம் காரணமாகவும் பாரம்பரியமான பண்பாட்டம்சங்கள் சில மாற்றமடைந்துள்ளன. இம்மாற்றங்களும் அவற்றிற்கான காரணங்களும் இவ் ஆய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.